# රාජ්‍ය පරිපාලන හා ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය

## அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## Ministry of Public Administration and Disaster Management

**නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.**
**சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 இலங்கை.**
**Independence Square, Colombo 07, Sri Lanka.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>**My No** | 76/1/15/ විශේෂ X වෙළුම | ඔබේ අංකය<br>உமது இல<br>**Your No** | | දිනය<br>திகத<br>**Date** | 2019.03.22 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்.

**<u>இலங்கை நிர்வாக சேவையின் I ஆந் தரத்துடைய அலுவலர்களை விசேட தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல் - 2018.01.01 மற்றும் 2018.07.01</u>**

மேற்படி விடயம் தொடர்பாக எனது இணையிலக்கம் மற்றும் 2019.03.13 ஆந் திகதிய விண்ணப்பம் கோரல் அறிவித்தலுடன் தொடர்புடையது.

02. 2018.01.01 மற்றும் 2018.07.01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அனுப்பி வைத்துள்ள அறிவித்தலில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகளின் கீழ் VI ஆக, 3 ஆம் வினைத்திறன் காண் தடை பரீட்சையினை உரிய திகதியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. என்றாலும், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2015 இன் 02 ஆம் பந்தியில் VI இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு, இலங்கை நிர்வாக சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013.12.23 ஆந் திகதி இலங்கை நிர்வாக சேவையின் I ஆந் தரத்தில் ஐந்து (05) வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் மூன்றாம் (III) வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியெய்த வேண்டுமெனும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. மேலும், 2008.12.23 ஆந் திகதியின் பின்னர் இலங்கை நிர்வாக சேவையின் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கு அவசியப்படும் தகைமையாக மூன்றாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை உரிய திகதியில் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும் என மேலும் அறியத்தருகின்றேன்.

05. அதற்கிணங்க, இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதியினை **2019.04.05** ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் மேலும் அறியத்தருகின்றேன்.

**ஒப்பம் / ஜே.ஜே. ரத்னசிரி**
செயலாளர்,
பொது நிருவாக மற்றும் அனர்த்த
முகாமைத்துவ அமைச்சு


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකතන<br>தொலைபேசி<br>Telephone | 011-269611-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | information@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Website | www.pubad.gov.lk |